T

# முதல் இடைப்பருவத் தேர்வு - 2021

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண் : | | | | | | |

*நேரம்: 3.00 மணி*

## கணிதம்

*மதிப்பெண்கள்: 90*

### பகுதி - I

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** $20 \times 1 = 20$

1. $|adj(adj\, A)| = |A|^9$ எனில், சதுர அணி A ன் வரிசையானது
   a) 3 b) 4 c) 2 d) 5

2. $A = \begin{bmatrix} 7 & 3 \\ 4 & 2 \end{bmatrix}$ எனில் $9I_2 - A =$
   a) $A^{-1}$ b) $\frac{A^{-1}}{2}$ c) $3A^{-1}$ d) $2A^{-1}$

3. $A^TA^{-1}$ ஆனது சமச்சீர் எனில் $A^2 =$
   a) $A^{-1}$ b) $(A^T)^2$ c) $A^T$ d) $(A^{-1})^2$

4. $A = \begin{bmatrix} 2 & 3 \\ 5 & -2 \end{bmatrix}$ மற்றும் $\lambda A^{-1} - A$ எனில் $\lambda$ ன் மதிப்பு
   a) 17 b) 14 c) 19 d) 21

5. $i + i^{n+1} + i^{n+2} + i^{n+3}$ ன் மதிப்பு
   a) 0 b) 1 c) $-1$ d) $i$

6. ஒரு கலப்பெண்ணின் இணை கலப்பெண் $\frac{1}{i-2}$ எனில் அந்த கலப்பெண்
   a) $\frac{1}{i+2}$ b) $\frac{-1}{i+2}$ c) $\frac{-1}{i-2}$ d) $\frac{1}{i-2}$

7. $|z| = 1$ எனில், $\frac{1+z}{1+\bar{z}}$ ன் மதிப்பு
   a) $z$ b) $\bar{z}$ c) $\frac{1}{z}$ d) 1

8. $z = x + iy$ என்ற கலப்பெண்ணிற்கு $|z+2| = |z-2|$ எனில் , z ன் நியமப்பாதை
   a) மெய் அச்சு b) கற்பனை அச்சு c) நீள்வட்டம் d) வட்டம்

9. $3x^2 + by^2 + 4bx - 6by + b^2 = 0$ என்ற வட்டத்தின் ஆரம்
   a) 1 b) 3 c) $\sqrt{10}$ d) $\sqrt{11}$

10. $x + y = k$ என்ற நேர்க்கோடு பரவளையம் $y^2 = 12x$ ன் செங்கோட்டுச் சமன்பாடாக உள்ளது எனில் k ன் மதிப்பு
    a) 3 b) $-1$ c) 1 d) 9

11. $\frac{x^2}{a^2} + \frac{y^2}{b^2} = 1$ என்ற நீள்வட்டத்தினுள் வரையப்படும் மிகப்பெரிய செவ்வகத்தின் பரப்பு
    a) 2ab b) ab c) $\sqrt{ab}$ d) $a/b$

12. $x^2 + y^2 - 8x - 4y + c = 0$ என்ற வட்டத்தின் விட்டத்தின் ஒரு முனை (11,2) எனில் அதன் மறுமுனை
    a) $(-5,2)$ b) $(2,-5)$ c) $(5,-2)$ d) $(-2,5)$

13. $\vec{a}$ மற்றும் $\vec{b}$ என்பன இணை வெக்டர்கள் எனில், $[\vec{a}, \vec{c}, \vec{b}]$ ன் மதிப்பு

a) 2 b) −1 c) 1 d) 0

14. $\hat{i}+\hat{j}, \hat{i}+2\hat{j}, \hat{i}+\hat{j}+\pi\hat{k}$ என்ற வெக்டர்களை ஒரு புள்ளியில் சந்திக்கும் விளிம்புகளாகக் கொண்ட இணைகரத் திண்மத்தின் கனஅளவு

a) $\pi/2$ b) $\pi/3$ c) $\pi$ d) $\pi/4$

15. $\vec{a}=\hat{i}+\hat{j}+\hat{k}$, $\vec{b}=\hat{i}+\hat{j}$, $\vec{c}=\hat{i}$ மற்றும் $(\vec{a}\times\vec{b})\times\vec{c}=\lambda\vec{a}+\mu\vec{b}$ எனில் $\lambda+\mu$ ன் மதிப்பு

a) 0 b) 1 c) 6 d) 3

16. $\vec{a}, \vec{b}, \vec{c}$ என்பன $[\vec{a}, \vec{b}, \vec{c}]=3$ எனுமாறுள்ள ஒரு தளம் அமையா மூன்று பூச்சியமற்ற வெக்டர்கள் எனில், $\left\{[\vec{a}\times\vec{b}, \vec{b}\times\vec{c}, \vec{c}\times\vec{a}]\right\}^2$ ன் மதிப்பு

a) 81 b) 9 c) 27 d) 18

17. ஓர் ஈருறுப்புச் செயலி S என்ற ஒரு கணத்தின் மீது ஒரு சார்பாக பின்வருவனவற்றிலிருந்து பெறப்படுவது

a) $S\to S$ b) $(SxS)\to S$ c) $S\to(SxS)$ d) $(SxS)\to(SxS)$

18. பின்வருபவைகளில் எது N ன் மீதுள்ள ஓர் ஈருறுப்புச் செயலி ஆகும்?

a) கழித்தல் b) பெருக்கல் c) வகுத்தல் d) அனைத்தும்

19. ஒரு கூட்டுக்கூற்றில் 3 தனிக்கூற்றுகள் உட்படுத்தப்பட்டிருந்தால் அம்மெய்மை அட்டவணையின் நிரைகளின் எண்ணிக்கை

a) 9 b) 8 c) 6 d) 3

20. $\neg(p\vee\neg q)$ ன் மெய்மை அட்டவணையில் கடைசி நிரலில் வரும் மெய் மதிப்பு 'F' விளைவுகளின் எண்ணிக்கை

a) 1 b) 2 c) 3 d) 4

## பகுதி - II

**II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி:** *(வினா எண். 30 கட்டாய வினா)* 7 x 2 = 14

21. $\begin{bmatrix}-2 & 4\\ 1 & -3\end{bmatrix}$ என்ற அணியின் நேர்மாறு காண்க.

22. $\begin{bmatrix}\cos\theta & -\sin\theta\\ \sin\theta & \cos\theta\end{bmatrix}$ என்பது செங்குத்து அணி என நிறுவுக.

23. சுருக்குக : $i\, i^2\, i^3 \ldots\ldots i^{2000}$

24. $6-8i$ ன் வர்க்கமூலம் காண்க.

25. குவியங்கள் $(0,\pm4)$ மற்றும் நெட்டச்சின் முனைகள் $(0,\pm5)$ என்ற நீள்வட்டத்தின் சமன்பாடு காண்க.

26. $(2,5,-3)$ என்ற புள்ளியிலிருந்து $\vec{r}\cdot(6\hat{i}-3\hat{j}+2\hat{k})=5$ என்ற தளத்திற்குள்ள தொலைவு காண்க.

27. $\vec{r}\cdot(\hat{i}+\hat{j}-2\hat{k})=3$ மற்றும் $2x-2y+z=2$ என்ற தளங்களுக்கு இடைப்பட்ட கோணம் காண்க.

28. R இன் மீது $a * b = a.|b|$ என்ற கணத்தின் மீது வரையறுக்கப்பட்டிருக்கும் * ஓர் ஈருறுப்புச் செயலியா என தீர்மானிக்க.

29. $A=\begin{bmatrix}0 & 1\\ 1 & 1\end{bmatrix}$, $B=\begin{bmatrix}1 & 1\\ 0 & 1\end{bmatrix}$ ஆகிய இரண்டும் ஒரே வகையான பூலியன் அணிகள் எனில் $A\vee B$ மற்றும் $A\wedge B$ ஆகியவற்றைக் காண்க.

30. $x^2 + y^2 = 25$ என்ற வட்டத்திற்கு $P(-3,4)$ ல் தொடுகோடு மற்றும் செங்கோட்டுச் சமன்பாடுகளைக் காண்க.

## பகுதி - III

**III. ஏவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி:** *(வினா எண். 40 கட்டாய வினா)* 7 x 3 = 21

31. $\begin{bmatrix} 1 & 1 & 1 & 3 \\ 2 & -1 & 3 & 4 \\ 5 & -1 & 7 & 11 \end{bmatrix}$ என்ற அணிக்கு ஏறுபடி வடிவத்தை பயன்படுத்தி அணித்தரம் காண்க.

32. $2x + 5y = -2,\ x + 2y = -3$ என்ற நேரிய சமன்பாட்டு தொகுப்பை நேர்மாறு அணிகாணல் முறையில் தீர்க்க.

33. கலப்பெண்கள் $u$, $v$ மற்றும் $w$ ஆகியவை $\frac{1}{u} = \frac{1}{v} + \frac{1}{w}$. என்றவாறு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. $v = 3 - 4i$ மற்றும் $w = 4 + 3i$ எனில் $u$ ஐ செவ்வக வடிவில் எழுதுக.

34. $|z + i| = |z - 1|$ என்ற சமன்பாட்டில் $z = x + iy$ ன் நியமப்பாதையை கார்டீசியன் வடிவில் காண்க.

35. இரு அச்சுக்களையும் தொட்டுச் செல்வதும், $(-4,-2)$ என்ற புள்ளி வழிச் செல்வதுமான வட்டத்தின் சமன்பாடு காண்க.

36. $y^2 = 4ax$ என்ற பரவளையத்திற்கு '$t_1$' மற்றும் '$t_2$' ஆகிய புள்ளிகளில் அமையும் தொடுகோடுகள் $[at_1t_2,\ a(t_1+t_2)]$ என்ற புள்ளியில் சந்திக்கின்றன என நிறுவுக.

37. ஏதேனும் ஒரு வெக்டர் $\vec{a}$ க்கு $\hat{i} \times (\vec{a} \times \hat{i}) + \hat{j} \times (\vec{a} \times \hat{j}) + \hat{k} \times (\vec{a} \times \hat{k}) = 2\vec{a}$ என நிறுவுக.

38. $\neg(p \wedge q) \equiv \neg p \vee \neg q$ என நிறுவுக.

39. $p \rightarrow q$ மற்றும் $q \rightarrow p$ ஆகியவைகள் சமானமற்றவை எனக்காட்டுக.

40. ஆதிப்புள்ளியில் இருந்து 7 அலகுகள் தொலைவில் உள்ளதும், செங்குத்தின் திசைவிகிதங்கள் 3,−4,5 கொண்டதுமான தளத்தின் வெக்டர் சமன்பாடு காண்க.

## பகுதி - IV

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** 7 x 5 = 35

41. a) $A = \frac{1}{9}\begin{bmatrix} -8 & 1 & 4 \\ 4 & 4 & 7 \\ 1 & -8 & 4 \end{bmatrix}$ எனில் $A^{-1} = A^T$ என நிறுவுக.

*(அல்லது)*

b) ஒரு மீன் தொட்டியை பம்பு A மற்றும் பம்பு B என்பன ஒன்றாக சேர்ந்து 10 நிமிடங்களில் நீரை நிரப்பும். பம்பு B ஆனது நீரை உள்ளே அல்லது வெளியே ஒரே வேகத்தில் அனுப்ப இயலும். எதிர்பாராத விதமாக பம்பு B ஆனது நீரை வெளியே அனுப்பினால் தொட்டி நிரம்ப 30 நிமிடங்கள் ஆகும் எனில் ஒவ்வொரு பம்பும் தொட்டியை தனித்தனியாக நிரப்ப எவ்வளவு காலம் எடுத்துக் கொள்ளும்? (கிராமரின் விதியைப் பயன்படுத்தி தீர்க்க)

42. a) $1, -\frac{1}{2} + i\frac{\sqrt{3}}{2}$ மற்றும் $-\frac{1}{2} - i\frac{\sqrt{3}}{2}$ என்ற புள்ளிகள் ஒரு சமபக்க முக்கோணத்தின் முனைப்புள்ளிகளாக அமையும் என நிறுவுக.

*(அல்லது)*

b) $z_1$ மற்றும் $z_2$ என்ற ஏதேனும் இரு கலப்பெண்களுக்கு $|z_1| = |z_2| = 1$ மற்றும் $z_1z_2 \neq -1$ எனில், $\frac{z_1+z_2}{1+z_1z_2}$ ஓர் மெய் எண் எனக்காட்டுக.

43. a) $18x^2 + 12y^2 - 144x + 48y + 120 = 0$ என்ற சமன்பாட்டின் கூம்பு வளைவின் வகையைக் கண்டறிந்து அவற்றின் மையம், குவியங்கள், முனைகள் மற்றும் இயக்குவரைகளைக் காண்க.

*(அல்லது)*

b) ஒரு பாலம் பரவளைய வளைவில் உள்ளது. மையத்தில் 10 மீ உயரமும், அடிப்பகுதியில் 30 மீ அகலமும் உள்ளது. மையத்திலிருந்து இருபுறமும் 6 மீ தூரத்தில் பாலத்தின் உயரத்தைக் காண்க.

44. a) வெக்டர் முறையில் $\cos(\alpha-\beta) = \cos\alpha \cos\beta + \sin\alpha \sin\beta$ என நிறுவுக.

*(அல்லது)*

b) (2,2,1), (9,3,6) ஆகிய புள்ளிகள் வழிச் செல்லக்கூடியதும், $2x + 6y + 6z = 9$ என்ற தளத்திற்குச் செங்குத்தாக அமைவதுமான தளத்தின் துணையலகு அல்லாத வெக்டர் சமன்பாடு மற்றும் கார்டீசியன் சமன்பாடுகளைக் காண்க.

45. a) i) * என்ற ஓர் ஈருறுப்புச் செயலி Q ன் மீது பின்வருமாறு வரையறுக்கப்படுகிறது. இந்த * ஆனது பரிமாற்றுப் பண்பு, சேர்ப்புப் பண்பு ஆகியவற்றை நிறைவு செய்கிறதா எனச் சோதிக்க.

$a * b = \left(\frac{a+b}{2}\right)$ ; $\forall a,b \in Q$

ii) * ஆனது சமனிப்பண்பு மற்றும் எதிர்மறைப் பண்பு ஆகியவை Q ன் மீது உண்மையாகுமா எனக் சோதிக்க. $a * b = \left(\frac{a+b}{2}\right)$ ; $\forall a,b \in Q$

*(அல்லது)*

b) மட்டு 11 ஐப் பொருத்து எச்சத் தொகுதிகளின் கணம் {0, 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10} இன் உட்கணம் A = {1,3,4,5,9} ன் மீது $X_{11}$ என்ற செயலிக்கு,

i) அடைவுப் பண்பு ii) பரிமாற்றுப் பண்பு iii) சேர்ப்புப் பண்பு iv) சமனிப்பண்பு v) எதிர்மறைப் பண்பு ஆகியவைகளை சரிபார்க்க.

46. a) ஒரு சிறுவன் $y = ax^2 + bx + c$ என்ற பாதையில் (–6,8), (–2,–12) மற்றும் (3,8) எனும் புள்ளிகள் வழியாக செல்கிறான். P(7,60) என்ற புள்ளியில் உள்ள அவனுடைய நண்பனை சந்திக்க விரும்புகிறான். அவன் அவனுடைய நண்பனை சந்திப்பான? (காஸ் நீக்கல் முறையை பயன்படுத்துக)

*(அல்லது)*

b) $z = x + iy$ என்ற ஏதேனும் ஒரு கலப்பெண் $\text{Im} = \left(\frac{2z+1}{iz+1}\right) = 0$ எனுமாறு அமைந்தால் zன் நியமப்பாதை $2x^2 + 2y^2 + x - 2y = 0$ எனக்காட்டுக.

47. a) ஒரு நீரூற்றில், ஆதியிலிருந்து 0.5 மீ கிடைமட்டத் தூரத்தில் நீரின் அதிகபட்ச உயரம் 4 மீ. நீரின் பாதை ஒரு பரவளையம் எனில் ஆதியிலிருந்து 0.75 மீ கிடைமட்டத் தூரத்தில் நீரின் உயரத்தைக் காண்க.

*(அல்லது)*

b) $\vec{a} = 2\hat{i} + 3\hat{j} - \hat{k}$, $\vec{b} = 3\hat{i} + 5\hat{j} + 2\hat{k}$, $\vec{c} = -\hat{i} - 2\hat{j} + 3\hat{k}$ எனில் $(\vec{a} \times \vec{b}) \times \vec{c} = (\vec{a}.\vec{c})\vec{b} - (\vec{b}.\vec{c})\vec{a}$ என்பதை சரிபார்க்க.

******